# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


**ஆணை நாள் 02.04.2025**

**முன்னிலை**

**திரு ரா.பிரியகுமார், B.Sc.,B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-6261/A/2024**

திரு. S.சஞ்சய்குமார் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர் / மேலாளர் ,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை
சேப்பாக்கம் மண்டலம்,
சென்னை-600 005. -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

| | |
|---|---|
| மனுதாரர் / மேல்முறையீட்டாளர் | திரு. S.சஞ்சய்குமார், நேரில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பு | திரு.B.தனிப்புகழ்,<br>பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,<br>உணவுப்பொருள் வழங்கல் மற்றும்<br>நுகர்வோர் பாதுகாப்புத் துறை<br>நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 22.11.2023 |
| மனுதாரர், ஜூன் 2023 முதல் அக்டோபர் 2023 வரை வடசென்னையில் எத்தனை புதிய குடும்ப அட்டை விண்ணப்பித்தார்கள், அதில் எத்தனை அங்கீகரிக்கப்பட்டது என்பது போன்ற தகவல்களை 5 இனங்களில் கோரியுள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 19.12.2023 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 01.01.2024 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 30.01.2024 |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 21.02.2024 |
| விசாரணை அழைப்பாணை நாள் | 02.04.2025 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் தனக்கு அளித்த தகவல்கள், தகவல்

அறியும் உரிமை சட்டத்திற்கு புறம்பானதாக தெரிவித்து மேல் நடவடிக்கை எடுக்க கோரினார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் திரு.B.தனிப்புகழ், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சேப்பாக்கம் மண்டலம், சென்னை-5 மற்றும் ந.ப.சர்வேஸ்வரன், மேலாளர், உதவி ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம் மண்டலம் அவர்கள் மனுதாரர் கோரிய தகவல்கள் ந.க.எண்.4/7051/2023, நாள் 19.12.2023 கடிதத்தின் வாயிலாக இனம் வாரியாக தகவல்கள் வழங்கியதாக தெரிவித்தார். மேலும், புதிய நலத்திட்ட உதவிகள் வழங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில் பயனாளிகள் எண்ணிக்கையினைச் சமநிலையில் வைக்கும் வண்ணம் குடும்ப அட்டைகள் விநியோகம் செய்யும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாகவும், தற்போது இணையவழியில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார்.

**4.** மனுதாரரின் தகவல் கோரும் பிரிவு 6(1)-ன் கீழான மனு, பொதுத் தகவல் அலுவலரின் வாதுரை ஆகியவற்றை பரிசீலனை செய்கையில், **மனுதாரர் கோரிய இனங்களுக்கு உரிய தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் வழங்கியுள்ளதாக ஆணையம் ஏற்று, இந்த மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/- (ரா.பிரியகுமார்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-6261/A/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
சேப்பாக்கம் மண்டலம்,
சென்னை-5.

**<u>மனுதாரர்</u>**
திரு. S.சஞ்சய்குமார் / S.பூஜா,
எண்.820, 12-வது கிழக்கு குறுக்குத் தெரு,
மகாகவி பாரதி நகர்,
சென்னை 600 039.

KRM/PA 09.04.2025